
www.tntextbooks.in

# சூழ்நிலையியல்

## முதல் வகுப்பு

### மூன்றாம் பருவம்

www.tntextbooks.in




# பொருளடக்கம்



## கணக்கு (1 - 38)


| அத்தியாயம் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | அளவைகள் | 2 |
| 2. | எண்கள் 21 முதல் 50 வரை | 14 |
| 3. | விவரங்களைக் கையாளுதல் | 22 |
| 4. | எண்கள் 51 முதல் 100 வரை | 31 |





## சூழ்நிலையியல் (39 - 60)


| அத்தியாயம் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | காற்று அடிக்குது! மழை பெய்யுது!<br>கப்பல் விடலாமா ? | 40 |
| 2. | எங்கே போகலாம் ? எப்படிப் போகலாம் ? | 47 |
| 3. | இரவு பகல் | 53 |




1

# காற்று அடிக்குது! மழை பெய்யுது! கப்பல் விடலாமா?



காற்று அடிக்குது காற்று அடிக்குது
மேகம் வருதுங்க
மழை வருது மழை வருது
நெல்லை அள்ளுங்க.
பாய்ந்து ஓடுது, பாய்ந்து ஓடுது
வெள்ளம் பாருங்க.
கப்பல் செஞ்சு, கப்பல் செஞ்சு,
விட்டுப் பாருங்க.
குடை எடுத்து, குடை எடுத்து,
ஆடிப்பாடுங்க.




- மழை உங்களுக்குப் பிடிக்குமா ?
- மழை நீரில் கப்பல் விட்டிருக்கிறீர்களா ?
- காகிதக் கப்பல் செய்யத் தெரியுமா ?
- மழை பெய்யும்போது வெளியில் சென்றால் எதை எடுத்துச் செல்வீர்கள் ?
- மழையின்போது உங்கள் தெரு எப்படி இருக்கும் ?
- உங்கள் தெருவில் சேறு இருக்குமா ?
- உங்கள் வீட்டைச் சுற்றி உள்ள செடிகள் மழையில் எப்படி இருக்கும் ?
- மழை வரும்போது மண்வாசனை வருமா ?
- மழை பெய்யும்போது என்னென்ன ஒலிகளைக் கேட்பாய் ?
- மழை நாளில் உங்களுக்கு என்ன சாப்பிடப் பிடிக்கும் ?
- மழை பெய்யும்போது உங்கள் ஊரில் மின்சாரம் இருக்குமா ?
- மழை பெய்யாவிட்டால் செடி, கொடிகள் வளருமா ?
- தண்ணீர் எதற்கெல்லாம் பயன்படுகிறது ?

☞ மழைப் பாடலைக் குழந்தைகளுடன் சேர்ந்து பாடுங்கள். மழை பற்றிய மேற்கண்ட வினாக்களைக் கேட்டுக் குழந்தைகளோடு கலந்துரையாடுங்கள்.






## விரலில் மழை ஓசை !

குழந்தைகளைத் தங்களது இடக்கையில் வலக்கை ஆள்காட்டி விரலால் தட்டச் சொல்லவும். முதலில் ஒரு விரல், அடுத்து இரண்டு விரல்கள், மூன்று விரல்கள், நான்கு விரல்கள் என ஒவ்வொன்றுக்கும் சிறிது நேரம் இடைவெளி விட்டுத் தட்டச் சொல்லவும். மழை பெய்வது போன்ற ஓசை கேட்கும்.

ஆசிரியருக்கு




## காகிதத்தினால் கப்பல் செய்வோமா!


1


2


3


4


5


6


7


8


9


10


11


12


13

www.tntextbooks.in




காற்று வீசுது!
காற்று வீசுது !

காற்று வீசுது! காற்று வீசுது !
சில்லென்று என்மேல காற்று வீசுது
மரமெல்லாம் ஆட காற்று வீசுது
காற்றாடி சுழல காற்று வீசுது
பாப்பா நான் மகிழ காற்று வீசுது
காற்று வீசுது! காற்று வீசுது !


**செயல்திட்டம் :** மாணவர்களைப் பெற்றோர் உதவியுடன் காகிதக் காற்றாடி செய்து வரச் சொல்லுங்கள்.

www.tntextbooks.in








## குதிக்கும் பட்டாணி




நூலில்லாத நூல்கண்டு குழலில் ஒரு துளையிடவும்.




படத்தில் காட்டியுள்ளவாறு நூல்கண்டின் ஒரு பகுதியைக் காகிதத்தால் ஒட்டி மூடவும்.




துளையின்மேல் பட்டாணியை வைக்கவும்.





மெதுவாக ஊதவும். துளையின்மேல் பட்டாணி குதித்து விளையாடும்.

அமுதன் செய்து மகிழ்ந்தான். நீங்களும் செய்யலாமே!




வானவில்லில் உள்ள நிறங்களைப் பலூன்களுக்கும் தீட்ட உதவுங்கள்.




www.tntextbooks.in



## என்னால் முடியும் ...

■ மழைபெய்யும் போது வெளியே சென்றால் எதை எடுத்துச் செல்வாய் ? கண்டுபிடித்து வண்ணமிடு.



■ காகிதக் கப்பல் செய்து காட்டு.

■ மழையின்போது என்னென்ன ஒலிகளைக் கேட்பாய் ?


■ தண்ணீர் எதற்கெல்லாம் பயன்படுகிறது ?

■ காற்றைப் பற்றி உங்களுக்குத் தெரிந்த பாடலைப் பாடுங்கள்.

www.tntextbooks.in

## எங்கே போகலாம் ? எப்படிப் போகலாம் ? 2




- படத்தில் நீ என்னென்ன வாகனங்களைப் பார்க்கிறாய் ?
- நீ உனது உறவினர் வீட்டிற்கு எந்த வாகனத்தில் செல்வாய் ?
- பேருந்தில் பயணம் செய்திருக்கிறாயா ? உன் பயண அனுபவத்தை விவரி.

சூழ்நிலையியல்

www.tntextbooks.in






## சக்கரங்கள் எத்தனை ?











## எண்ணி எழுதுவோமா ?



இரண்டு சக்கர வாகனங்கள் ____________ .


மூன்று சக்கர வாகனங்கள் ____________ .

நான்கு சக்கர வாகனங்கள் ____________ .


நான்கு சக்கரங்களுக்கு மேல் உள்ள வாகனங்கள்____________ .

☞ வாகனங்களின் பெயர் மற்றும் சக்கரங்களின் எண்ணிக்கையை அறிந்திட குழந்தைகளுக்கு உதவுங்கள்.


www.tntextbooks.in




## வகுப்பறைத் தொடர் வண்டி



**காலித் தீப்பெட்டிகள், களிமண்**
**அல்லது பிளாஸ்டிக் பாட்டில் மூடிகள்,**
**நூல், தென்னங்குச்சிகள் கொண்டு**
**தொடர்வண்டி செய்வோம்.**




**உனக்கு விருப்பமான ஏதேனும் ஒரு வாகனத்தை வரைந்து வண்ணமிடு.**

www.tntextbooks.in




# எது எவ்வழி செல்லும் ?

- தரைவழியாகச் செல்லும் வாகனங்களுக்கு ○ குறியிடுக.
- வான்வழியாகச் செல்லும் வாகனங்களுக்கு □ குறியிடுக.
- நீர்வழியாகச் செல்லும் வாகனங்களுக்கு △ குறியிடுக.


______

______

______


______

______

______


______


______

______


www.tntextbooks.in




**உங்கள் விரல்ரேகையைக் கொண்டு எங்களை உருவாக்குங்கள் பார்க்கலாம்!**









**படத்தொகுப்பு செய்யலாமா ?**

**செயல்திட்டம் :** பல்வேறு வாகனங்களின் படங்களைத் தொகுத்து படத்தொகுப்பு தயாரிக்க உதவுங்கள்.

www.tntextbooks.in

## என்னால் முடியும் ...

■ ஒரு வாகனம் மட்டும் மூன்று வரிசைகளிலும் இடம் பெற்றுள்ளது. அந்த வாகனம் எது ? கண்டுபிடித்து வட்டமிடு.



■ நான்கு சக்கரங்களுக்கு மேல் உள்ள வாகனங்களின் பெயர்களை எழுது.

■ எது எவ்வழி செல்லும் ?

( தரைவழி, வான்வழி, நீர்வழி )

www.tntextbooks.in

3

# இரவு பகல்







காலை
நிகழ்வுகள்











மாலை
நிகழ்வுகள்















## இரவு நிகழ்வுகள்









பேத்தி : தாத்தா, இரவு வந்தால் ஏன் இருளா இருக்கு ?

தாத்தா : சூரியன் மறைந்ததால் இருளா இருக்கு.

பேத்தி : கொஞ்சம் வெளிச்சம் தெரியுதே!

தாத்தா : அது நிலாவோட வெளிச்சம்.

பேத்தி : விண்ணில் மின்னுவது என்ன ?

தாத்தா : அதுதான் விண்மீன்.

☞ படத்தைக் கூர்ந்துபார்க்கச் செய்து காலை, மாலை, இரவு நிகழ்வுகளைப் பற்றிக் குழந்தைகள் பேசுவதற்கு உதவுங்கள்.






## பகலில் வானத்தைப் பார்த்தாயா?

- பகலில் வானில் விண்மீன் தெரிகிறதா ?
- பகலில் வானில் தெரியும் நிறங்களைக் கூறு.
- சூரியன் உதிக்கும்பொழுது வானம் எந்த நிறத்தில் இருக்கும் ?
- சூரியன் மறையும்பொழுது வானம் எந்த நிறத்தில் இருக்கும் ?
- பகலில் வானில் நிலா தெரியுமா ?
- உனக்குப் பகல் விருப்பமானதா ? இரவு விருப்பமானதா ? ஏன் ?



## இரவில் வானத்தைப் பார்த்தாயா?

- இரவில் வானத்தின் நிறம் என்ன ?
- இரவில் மரத்தின் நிறம், பூக்களின் நிறம் தெரியுமா ?
- நிலா நாள்தோறும் வானில் வருகிறதா ?
- வானத்தில் எவை மின்னுகின்றன ?
- விண்மீன்களை எண்ண முடியுமா ?
- நாள்தோறும் நிலா ஒரே அளவாகத் தெரிகிறதா ?



www.tntextbooks.in

www.tntextbooks.in




இரவில் விழித்திருக்கும் உயிரினங்களை ✔ செய்வோமா.












www.tntextbooks.in

## வீட்டில் காலைக்காட்சிகள்



❖ இவர்கள் என்னென்ன வேலைகள் செய்கிறார்கள் ?

❖ உனது வீட்டில் காலையில் யார் ? யார் ? என்னென்ன வேலைகள் செய்வார்கள் ?

❖ நீ காலையில் என்னென்ன வேலைகள் செய்வாய் ?

☞ படத்தைக் கூர்ந்து பார்க்கச் செய்து, வினாக்கள் எழுப்பி, குழந்தைகளுடன் கலந்துரையாடுங்கள்.

www.tntextbooks.in




## விடுகதை இங்கே! விடை எங்கே?

1. கிட்டே கிட்டே போனாலும்
   எட்டவே எட்டாது.
   அது என்ன?



2. எண்ணி எண்ணிப் பார்த்தாலும்
   எண்ணவே முடியாது.
   அது என்ன?



3. வெள்ளித் தட்டு அது.
   தானாகவே வரும்,
   காணாமலும் போகும்.
   அது என்ன?



☞ புதிய புதிய எளிய விடுகதைகளை வகுப்பறையில் பயன்படுத்துங்கள்.

www.tntextbooks.in




## இரவில் வானம்



**தேவையான பொருள்கள் :**

கறுப்பு வண்ண அட்டை, சிறிதளவு பசை, பஞ்சு, சமிக்கி.


**செய்முறை :**

★ அட்டையைச் சதுரமாக வெட்டிக்கொள்ளவும்.
★ நிலாவைப்போல வரைந்து பசை தடவி பஞ்சை ஒட்டவும்.
★ சமிக்கியை ஆங்காங்கே அட்டையில் ஒட்டவும்.

☞ இரவு பகல் சார்ந்த படங்களைக் குழந்தைகளுக்குக் காட்டுங்கள்

## என்னால் முடியும்...

■ இரவில் வானத்தில் தெரிபவை எவை ? கண்டுபிடித்து வண்ணமிடு.



■ பகலில் வானத்தில் தெரிபவை எவை ?
■ சூரியனை வரைந்து வண்ணமிடு.

www.tntextbooks.in

# ‘என்னால் முடியும், நான் செய்தேன்’

## ('I can, I did')

### மாணவர்கள் கற்றல் செயல்பாடுகள் பதிவேடு

பாடம் :

| வ. எண் | நாள் | பாட எண் | பாடத்தலைப்பு | செயல்பாடுகள் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

சூழ்நிலையியல்